எவ்வளவு நெருக்கடியான சூழ்நிலையில் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பது உழவர் உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, அதிகச்செலவினங்களைத்தற்போது மின்சார வாரியம் ஏற்க இயலாது. ஏற்கெனவே இருக்கின்ற திட்டம் மக்களுக்கு நல்ல முறையில் பயன்படுகின்ற திட்டம். அதையே பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 11, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

திருத்தணி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல்.

*9968—திரு. கி. இராஜன்பாபு (என்கிற) தணிகைபாபு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருத்தணி நகரில் தற்போது உள்ள பேருந்து நிலையம் போதிய இடவசதியில்லாததால், மாற்று இடத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான பணிகள் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி நகரியத்தில் தற்பொழுது இயங்கிவரும் பேருந்து நிலையம் இடவசதி இல்லாததால், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை பரிமாற்றம் செய்து மத்திய ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசினுடைய நிதி கிடைக்கப்பெற்றிருக்கிறது. திருக்கோவிலுக்குச் சொந்தமான அந்த இடத்திற்கு கைமாறாகக் திருத்தணி நகரீயத்திற்குச் சொந்தமான 2 இடங்களைத் தருவதாக நகரீயம் ஒப்புக்கொண்டும் திருக்கோவிலுடைய ஆணையருக்கு கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, உடனடியாக இந்த கால தாமதத்தை நிவர்த்தி செய்து இன்றைய தினம் எனது தொகுதியில் பல கோடி ரூபாய் திட்டங்களை எல்லாம் அள்ளித் தந்திருக்கிற தமிழகத்தினுடைய நிரந்தர முதலமைச்சர் புனிதத் தாய், டாக்டர் புரட்சித் தலைவி

அவர்களுடைய ஆட்சியில் இந்தக் கட்டத்திலேயும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நல்ல உணர்வோடு எனது தொகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10—40

திருத்தணி ஒரு மிகப் பெரிய ஐந்தாவது படை வீடு. அங்கே, அந்தப் பேருந்து நிலையம் அமைவதால் அந்தத் திருக்கோயிலுக்குத்தான் பயனும் ஏற்படவுள்ளது. எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான அந்த இடத்தினை அரசு உடனடியாக மேற்கொண்டு அந்தப் பேருந்து நிலையம் அமைவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் உடன் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டுமாய் உங்களின் சார்பாக எனது வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : உடனடியாக நிறைவேற்றித் தரப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டபோது அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 4.40 ஏக்கர் நிலமும் அருகிலுள்ள 1.50 ஏக்கர் புறம்போக்கு நிலமும் பேருந்து நிலையம் அமைப்பதற்கு சிறந்த இடமாகக் கருதப்பட்டது. கோயில் நிலத்திற்கு ஈடாக திருத்தணி நகரிய பராமரிப்பில் உள்ள இடிகுளம் என்ற குளப் பகுதியினை, சுமார் 1.5 ஏக்கர் நிலத்தை திருக்கோயில் நிர்வாகத்திற்கு ஒப்படைக்கிற நில பரிமாற்ற நடவடிக்கை முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்தப் பரிமாற்றம் விரைவுபடுத்தப்பட்டு மத்திய ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 1.2 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 12, திரு. செ. கு. தமிழரசன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

12—

மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*14673—திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநகராட்சிகளிலுள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

(இ) நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மாநகராட்சிகளில் உள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஒரு நல்ல திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். இதற்கான கருத்துருக்களை உருவாக்கி அரசுக்கு அனுப்பும்படி சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அந்தக் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டுத் தேவையான உத்திரவுகள் விரைவில் வழங்கப்படும்.

(இ) இந்தத் திட்டம் படிப்படியாக நகராட்சிகளுக்கும் விரிவாக்கப்படுவது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, நூற்றுக்கு நூறு சதவீதம் ஒரே சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்தான் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊரையே தூய்மைப்படுத்துகிற அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் இல்லாமல் ஒதுக்குப்புறங்களிலே தங்குகிற நிலைமை, அவல நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. துப்புரவுத் தொழிலாளர்கள் நகர்ப்புறங்களிலே வீடு கேட்டால் அவர்களுக்கு வாடகைக்குக்கூட வீடு கிடைப்பதில்லை. எனவே இந்த அவல நிலமையைப் போக்கிட அரசு முன் வந்திருப்பது பாராட்டிற்குரியது. 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக்